காலம் ஒரு நாள் வாராது போகுமா
கண்ணீர் ஒரு நாள் காயாது போகுமா
எங்களின் பமி எங்களை வந்து சேரலாம்
எங்களை வாட்டும் சோகமும் அன்று தீரலாம்
காலம் ஒரு நாள் வாராது போகுமா
கண்ணீர் ஒரு நாள் காயாது போகுமா

வாழ்கையே போர்க்களமாய் போனது என் மண்ணிலே
ராத்திரி பொழுதும் கூட தூக்கம் இல்லை கண்ணிலே
காக்கையும் குருவியும் வாழ கூட உண்டு காட்டிலே
நாங்களும் வாழ்வதற்கென்று கூறை இல்லை நாட்டிலே
நாள் ஓரிடம் என்றே பொகிறோம்
கால் போனதே ஊராய் வாழ்கிறோம்
விடிந்தாலும் ஒலி இல்லை எங்கள் கண்ணில் மாத்திரம்

காலம் ஒரு நாள் வாராது போகுமா
கண்ணீர் ஒரு நாள் காயாது போகுமா

ஆயிரம் ஆண்டுகள் இங்கே ஆண்ட இனம் நாங்களே
ஆயினும் அகதிகள் என்றே வாழ்வது இங்கு நாங்களே
எங்களின் மண்ணை இழந்தோம் மாடு மனை போனது
பேற்ற தாய் தந்தை இழந்தோம் கண்கள் ரத்தம் ஆனது
ஊர் போனது உறவும் போனது பேர் சொல்லும் என் பிள்ளை போனது
ஒரு காட்டில் சிறு கூட்டில் நாங்கள் இன்று வாழ்கிறோம்

காலம் ஒரு நாள் வாராது போகுமா
கண்ணீர் ஒரு நாள் காயாது போகுமா
எங்களின் பமி எங்களை வந்து சேரலாம்
எங்களை வாட்டும் சோகமும் அன்று தீரலாம்
காலம் ஒரு நாள் வாராது போகுமா
கண்ணீர் ஒரு நாள் காயாது போகுமா